தீர்வு:

கொடுக்கப்பட்டுள்ள பரவல் தொடர்ச்சியற்றதுடன் தரவுகளை அவ்வாறே வரைபடத்தில் குறித்தால், இரண்டு பிரிவுகளுக்கு இடையில் இடைவெளி இருப்பதால் செவ்வகப்பட்டை விளக்கப்படத்தை நாம் பெறுவோம். எனவே சரிசெய் காரணியைப் (0.5) பயன்படுத்தித் தொடர்ச்சியானப் பரவலாக மாற்ற வேண்டும்.

முதல் பிரிவு இடைவெளியை 9.5-15.5 என எழுதமுடியும்.மேலும்மீதமுள்ளபிரிவுஇடைவெளிகளையும் இதேபோல் மாற்ற வேண்டும். நிகழ்வெண்களில் எந்த மாற்றமும் இல்லை.

புதிய தொடர்ச்சியான நிகழ்வெண் பரவல் அட்டவணை.



வயது (ஆண்டுகளில்)	9.5-15.5	15.5-21.5	21.5-27.5	27.5-33.5	33.5-39.5	39.5-45.5
பெண்களின் எண்ணிக்கை	350	920	830	480	230	200

கீழ்க்காணுமாறு நிகழ்வுச் செவ்வகம் வரைய வேண்டும்.

எடுத்துக்காட்டு 6.8

கொடுக்கப்பட்ட நிகழ்வுச் செவ்வகத்தை உற்றுநோக்கிக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

குறிப்பு: குறைந்த எடை பிரிவு: 30 கி.கி இக்கும் குறைவாக; சரியான எடை பிரிவு : 30-45 கி.கி; அதிக எடை பிரிவு: 45 கி.கி இக்கும் அதிகம்.

1. நிகழ்வுச் செவ்வகம் குறிக்கும் விவரம் என்ன?
2. எந்தக் குழுவில் அதிகபட்சமான மாணவர்களின் எண்ணிக்கை உள்ளது?
3. எத்தனை மாணவர்கள் குறைந்த எடைப் பிரிவில் உள்ளனர்?
4. எத்தனை மாணவர்கள் அதிக எடைப் பிரிவில் உள்ளனர்?.
5. எத்தனை மாணவர்கள் 30-40 கி.கி எடைப் பிரிவில் உள்ளனர்?



தீர்வு:

1. எட்டாம் வகுப்பு மாணவர்கள் எடையைச் சேகரித்து, அதனை நிகழ்வுச் செவ்வகத்தில் குறிக்கப்பட்டுள்ளது.
2. 30-35 கிகி எடைப் பிரிவில் அதிகபட்சமாக 9 மாணவர்கள் உள்ளனர்.
3. $7(=2+5)$ மாணவர்கள் குறைந்த எடைப் பிரிவில் உள்ளனர்.
4. 3 மாணவர்கள் அதிக எடைப் பிரிவில் உள்ளனர்.
5. 16 $(= 9 + 7)$ மாணவர்கள் 30-40 கிகி எடைப் பிரிவில் உள்ளனர்.

8th_Maths_Tamil Medium_Chapter 6.indd 232 23/11/2022 17:03:56